139

<u>சுருக்கம்</u>

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை பணி நியமனம் – பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில், திருப்பூர் சுகாதாரப் பகுதி மாவட்டம் குன்னத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் தனியர் திருமதி.சி.சிவரஞ்சனி, தா./பெ.(அமரர்) திருமதிA.ராணி என்பவரின் தற்காலிகப் பணியினை, அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் இணைந்த நாளான 24.07.2019 அன்று முற்பகல் முதல் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் (ஏபி1) துறை</u>

அரசாணை (2ப) எண்:103

நாள்.09.10.2023
சுபகிருது, புரட்டாசி – 22
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கடித எண்.27591/பதொ.4/இரு3, நாள்22.04.2022 மற்றும் 30.11.2022.

******

**<u>ஆணை:</u>**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் அவர்கள், திருப்பூர் சுகாதாரப் பகுதி மாவட்டம் குன்னத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் தனியர் திருமதி.சி.சிவரஞ்சனி, தா./பெ. (அமரர்) திருமதி A.ராணி என்பவரின் தற்காலிகப் பணியினை, அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் இணைந்த நாளான 24.07.2019 அன்று முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துமாறு பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேலே பத்தி1–ல் கண்டுள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை, அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020–இல் வெளியிடப்பட்டுள்ள விரிவான வழிகாட்டுதல்களின்படி ஆய்வு செய்தபோது, இந்நேர்வில் பரிசீலிக்கப்படும் தனியர் மேற்படி அரசாணையில் கருணை அடிப்படை பணி நியமனம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் வயதுத் தகுதி தவிர, தேவையான பிற தகுதிகளை நிறைவு செய்துள்ளார்

Medical Officer.
Block Primary Health Centre
Kunnathur -638 103.

என்பதும், தனியர் 10.12.2014 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசாணை (நிலை) எண்.155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (கியூ1) இன் அடிப்படையில், 19.05.2020 நாளிட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.27591/ப.தொ.4/திரு.3/2019-ன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 24.07.2019 அன்று முற்பகல் பணியில் இணைந்துள்ளார் என்பதும் தெரிய வருகிறது. மேலும், இந்நேர்வில் தனியர் பணி நியமனம் வேண்டி 10.07.2009 அன்று சமர்ப்பித்த விண்ணப்பமானது அரசுப் பணியாளர் மரணமடைந்த மூன்றாண்டுகளுக்குள் அளிக்கப்பட்டிருந்தாலும், அச்சமயத்தில் தனியர் 18 வயதினை நிறைவு செய்யவில்லை. எனவே, மேற்படி விண்ணப்பத்தின் அடிப்படையில் தனியருக்கு வழங்கப்பட்ட பணி நியமனமானது அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020 மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016இன் சட்டப் பிரிவு 20(6)(b)க்கு முரணானது என்பதால் மேற்படி அரசாணை மற்றும் சட்டப் பிரிவினை தனியர் பொருட்டு தளர்வு செய்தே தனியரின் கருணை அடிப்படையிலான தற்காலிகப் பணி நியமனத்தினை வரன்முறை செய்ய இயலும் என்பதோடு, அவ்வாறு தனியரின் பணியினை பணிவரன்முறை செய்து, பணப்பலன்களை பணி நியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு வழங்கக் கருதும் பட்சத்தில் மேற்காணும் சட்டத்தின் பிரிவு 28(2)-யும் தனியர் பொருட்டு தளர்வு செய்ய வேண்டும்.

3. இந்நிலையில், மேலே பத்தி 1-ல் கண்டுள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று திருமதி.சி.சிவரஞ்சனி தா./பெ. (அமரர்) திருமதி A.ராணி என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் 24.07.2019 முற்பகல் முதல் பணிநியமனம் செய்யப்பட்டதை பணிவரன்முறை செய்ய ஏதுவாக அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020-க்கு விலக்களித்து, தனியர் திருமணமான மகள் மற்றும் விண்ணப்ப நாளில் குறும வயது நிறைவு செய்யாதது தொடர்பாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவுகள் 15, மற்றும் 20 (6) (b) மற்றும் பணப்பலன்கள் பணி நியமன நாள் முதல் வழங்க ஏதுவாக பிரிவு 28(2) ஆகியவற்றை தனியர் பொருட்டு தளர்வு செய்யவும், அப்பதவிக்கான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் வரன்முறை செய்ய அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியினை பணி நியமன நாளிலிருந்து வரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண் 5208956 / ஜி2 /2023 நாள் 21.06.2023 ஆகியவற்றின் ஒப்புதலோடு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர்,
சென்னை-600 006.
தனியர் (பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை)
சென்னை-600 006. வழியாக
மாநில தலைமை கணக்காயர், சென்னை-600 018.
திருப்பூர் மாவட்ட கருவூல அலுவலர், திருப்பூர்

<u>நகல்</u>

மாண்புமிகு நிதி (ம) மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
மாண்புமிகு தொழிலாளர் (ம)நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 600 009.
மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
மனிதவள மேலாண்மை (ஜி) துறை,
மருத்துவம்-மக்கள் நல்வாழ்வு (தகவு பிரிவு)துறை,
சென்னை - 600 009.
இருப்பு கோப்பு / உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

Medical Officer,
Block Primary Health Centre
Kunnathur - 638 103.